# திருவிவிலியமும்

# பாஸ்கா காலமும்



Fr. குழந்தை யேசு ராஜன் CMF

கிளாரட் இல்லம்
கும்பகோணம்

# பொருளடக்கம்

1. உயிர்த்த ஆண்டவரின் பத்து காட்சிகள்-- 3

2. உயிர்த்த ஆண்டவரின் ஏழு செய்திகள்--- 8

3. உயிர்த்த ஆண்டவரின்

மூன்று அற்புதங்கள்----13

4. இயேசுவின் விண்ணேற்றத்தின்


ஐந்து வெளிப்பாடுகள்---17

5. தூய ஆவியின் ஒன்பது உருவகங்கள்---22

# திருவிவிலியம் சொல்லும் உயிர்த்த ஆண்டவரின் பத்து காட்சிகள்

மண்ணில் விதைகள் என்றுமே புதைக்கப்படுவதில்லை, அவை விதைக்கப்படுகின்றன. இயேசு என்ற ஒரு வைர விதையை விதைத்தார்கள். மண்ணை கிழித்து உயர்ந்து நின்றார். இறைமகன் இயேசு ஒரு பஞ்சு என்று பொத்தி வைக்க பார்த்தார்கள். வேலி போட்டு முடக்கி வைக்க இயேசு என்ன வீட்டில் பூச்சியா... இவர் ஒரு புது விடியல்.

இலட்சியவாதிகள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகிறார்கள். இந்த பூமியில் பல மனிதர்கள் பிறந்தார்கள், உலகம் போற்றும் வண்ணம் உயர்ந்தார்கள், ஆனால் இறைமகன் இயேசு மட்டுமே இந்த உலகின் சராசரி மனிதனாக பிறந்தார், மனிதனை தூயவனாக உயர்த்தினார், சக மனிதனுக்காக உயிர்விட்டார், மீண்டும் உயிர் பெற்றார். இயேசுவின் உயிர்ப்பு என்பது இயேசுவின் சீடர்களால் புனையப்பட்ட கதையோ, வதந்தியோ அல்ல. மாறாக வரலாற்றில் நடந்த ஒரு நிகழ்வு இயேசுவின் உயிர்ப்பு, நம் நம்பிக்கையின் பிறப்பு. இயேசுவின் உயிர்ப்பு, கிறிஸ்தவர்களுக்கும் உயிர்ப்பு. இயேசுவின் உயிர்ப்பை கொண்டாடும் இந்த பாஸ்கா காலம் நம் நம்பிக்கையை அறிக்கையிட்டு கொண்டாடும் காலம். இது மகிழ்ச்சியின் காலம், மீட்பின் காலம், உயிர்த்த ஆண்டவர் தரும் அமைதியின் காலம். இப்பெரும் பாஸ்கா காலச் சிறப்பாக திருவிவிலியம் சொல்லும் உயிர்த்த ஆண்டவரின் பத்து காட்சிகள்.



மகிழ்ச்சி பொங்கும் பாஸ்கா காலத்தில் திருஅவையின் திருவழிபாட்டு வாசகங்களில் நாம் அதிகம் தியானிக்கும் இறைவார்த்தை பகுதிகள் உயிர்த்த ஆண்டவரின் காட்சிகள். திருவிவிலியத்தின் அடித்தளத்தில் உயிர்த்த ஆண்டவரின் 10 காட்சிகள்.


## 1. இயேசு மகதலா மரியாவுக்குத் காட்சி அளித்தல் (யோவான் 20 :11 -18)



யோவான் நற்செய்தி 20:11-18 -ல் இயேசு மகதலா மரியாவுக்குத் காட்சியளிப்பதை சுட்டிக்காட்டுகிறது. வாரத்தின் முதல் நாளன்று விடியற்காலையில் இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார் என யோவான் 20:1- ம், இந்த மகதலா மரியாவிடமிருந்து தான் இயேசு ஏழு பேய்களை ஓட்டினார் என மாற்கு 16 :19 -ம் கூறுகிறது. இந்த காட்சி ஒத்தமை நற்செய்தி நூல்கள் எனக் குறிப்பிடப்படும் மாற்கு 16: 9 -11 வரை உள்ள இறைவார்த்தை பகுதியிலும் மற்றும் மத்தேயு 28 :9- 10 உள்ள இறைவார்த்தை பகுதியிலும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 2. இயேசு எம்மாவு வழியில் இரண்டு சீடருக்கு காட்சியளித்தல் (லூக்கா 24: 13-35)

லூக்கா 24: 13 -35 எனும் இறைவார்த்தை பகுதியில் இயேசு எம்மாவு வழியில் சீடருக்கு காட்சியளித்ததை சுட்டிக்காட்டுகிறது. இயேசுவின் சீடர்களுள் இருவர் எருசலேமிலிருந்து 11 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எம்மாவு என்னும் ஊருக்கு செல்லும் வழியில் அவர் அவர்களுக்கு காட்சி அளித்தார். இந்த காட்சியை ஒத்தமை நற்செய்தி நூல்களில் மாற்கு 16: 12- 13 இயேசு வயல் வெளியில் சென்ற இரு சீடருக்கு காட்சி தந்ததாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.




## 3. சீமானுக்கு காட்சியளித்தல் (லூக்கா 24: 34)



லூக்கா 24: 34-ல் இயேசு சீமோனுக்கு தோற்றமளித்தது அயற்கூற்றில் கூறப்பட்டிருக்கிறது.


## 4. 11- சீடர்களுக்கு காட்சி அளித்தல் (யோவான் 20: 19 -23)

யோவான் 20 :19- 23 - ல் இயேசு தோமா அல்லாத மற்ற 11 சீடர்களுக்கு காட்சி அளித்தது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த காட்சி ஒத்தமை நற்செய்தி நூல்களிலும் மாற்கு 16: 14, மத்தேயு 28: 16- 20 மற்றும் லூக்கா 24 :36- 49 -யிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



## 5. தோமா மற்றும் சீடர்களுக்கு காட்சி அளித்தல் ( யோவான் 20: 24- 29 )

பன்னிருவருள் ஒருவரான திதிம் என்னும் தோமா சீடரோடு இருந்த போது இயேசு காட்சி தந்ததாக யோவான் 20: 25 -29 இறைவார்த்தை பகுதி சுட்டிக்காட்டுகிறது. இப்பகுதியில்தான் "இதோ என் கைகள், இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி, என் விலாவில் இடு." என நம்பிக்கையோடு இருக்க இயேசு அழைக்கிறார்.



## 6. சீடர்கள் ஏழு பேருக்கு காட்சியளித்தல் (யோவான் 21: 1- 14 )

இயேசு திபேரியக் கடல் அருகே தம் சீடர்கள் ஏழு பேருக்கு காட்சி அளித்ததாக யோவான் 21: 1 -14 -ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



## 7. கேபாவுக்கும் பன்னிருவருக்கும் காட்சி அளித்தல்.


## (1 கொரிந்தியர் 15: 5)

இயேசு உயிர்ப்புக்கு பிறகு கேபாவுக்கும் பன்னிருவருக்கும் காட்சி அளித்ததாக பவுல் அடிகளார் எழுதிய கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகம் இயல் பதினைந்தில் இறைவார்த்தை ஐந்தில், அயற்கூற்றில் கூறப்பட்டிருக்கிறது.



## 8. 500க்கும் மேற்பட்ட சகோதர சகோதரிகளுக்கு காட்சி அளித்தல் (1 கொரிந்தியர் 15: 6)

இயேசு உயிர்ப்புக்கு பிறகு 500க்கும் மேற்பட்ட சகோதர சகோதரிகளுக்கு காட்சி அளித்ததாக அயர் கூற்றில் பவுல் அடிகளார் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து இயல் பதினைந்தில், ஆறாவது வசனத்திலேயே கூறி இருக்கின்றார்.



## 9. யாக்கோபுக்கும் திருத்தூதர்கள் அனைவருக்கும் காட்சி அளித்தல் (1 கொரிந்தியர் 15: 7)



இயேசு உயிர்த்த பிறகு யாக்கோபுக்கும் திருத்தூதர்கள் அனைவருக்கும் காட்சி அளித்ததாக அயர் கூற்றில் பவுல் அடிகளார் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து இயல் பதினைந்தில் ஏழாவது வசனத்திலேயே கூறி இருக்கின்றார்.

# 10.விண்ணேற்றத்துக்கு முன்பு சீடர்களுக்கு காட்சி அளித்தல் (லூக்கா 24: 50-53)

லூக்கா 24 :50- 53-ல் இயேசு விண்ணேற்றக்கு முன்பு சீடர்களுக்கு தோன்றி அவர்களை பெத்தானியா வரை அழைத்து சென்று ஆசி வழங்கி விண்ணேற்றம் அடைந்ததை இப்பகுதி சுட்டிக்காட்டுகிறது.



திருவிவிலியம் சொல்லும் இந்த பத்து உயிர்த்த ஆண்டவரின் காட்சிகளில் ஐந்து காட்சிகள் இயேசு பேசிய வார்த்தைகளோடு நேர் கூற்றிலும், மற்ற ஐந்து காட்சிகள் இயேசு பேசிய வார்த்தைகள் அல்லாது அவர் காட்சி அளித்ததாக அயர் கூற்றிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நம்பிக்கையின் பிறப்பை அறிக்கையிடும் மகிழ்ச்சி பொங்கும் இந்த பாஸ்கா காலத்தில் உயிர்த்த ஆண்டவரின் காட்சிகளை விவிலியம் எடுத்து வாசிப்போம். இறைநம்பிக்கையில் வளர்வோம்.

**வீடியோவில் காண....** - https://youtu.be/WbT28zP7hkY

# திருவிவிலியம் சொல்லும் உயிர்த்த ஆண்டவரின் ஏழு செய்திகள்

"கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது; இருபக்கமும் வெட்டக் கூடிய எந்த வாளினும் கூர்மையானது; ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது; எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது, உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது". (எபிரேயர் 4:12) எனும் இறை வார்த்தைக்கு ஏற்ப ஆண்டவருடைய வார்த்தை, நம் வாழ்விற்கு உயிரளிப்பதாகவும், ஆற்றல் தருவதாகவும் இருக்கிறது. "இறைவார்த்தையின்றி நிறைவாழ்வு இல்லை" நிறை வாழ்வு பெற இறைவார்த்தை நம் வாழ்வாக மாறவேண்டும். திருஅவையின் திருவழிபாட்டு காலமான மகிழ்ச்சி பொங்கும் இந்த பாஸ்கா காலத்தில் உயிர்த்த ஆண்டவரின் வார்த்தைகளை தியானிப்போம்.



நற்செய்தி நூல்கள் உயிர்த்த ஆண்டவரின் காட்சிகளில் அவருடைய வார்த்தையையும் பதிவு செய்கிறது. நற்செய்தி நூல்களில் உயிர்த்த ஆண்டவரின் வார்த்தைகள் மொத்தம் 40 - இறை வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த 40 - இறைவசனங்களில் மேற்கோள்குறியிட்டு காட்டியிருக்கின்ற உயிர்த்த ஆண்டவரின் வார்த்தைகள் மொத்தம் - 33. மத்தேயு நற்செய்தியில் 4 - இறை வசனங்களில் இரண்டு மேற்கோள்குறியிட்டு காட்டிய இறை வார்த்தைகளும் மாற்கு நற்செய்தியில் 4 -இறை வசனங்களில் ஒரு மேற்கோள் குறியிட்டு காட்டிய இறைவார்த்தையும் லூக்கா நற்செய்தியில் 12- இறை வசனங்களில் 8- மேற்கோள்குறியிட்டு காட்டிய இறைவார்த்தைகளும் மற்றும் யோவான் நற்செய்தியில் 20 - இறை வசனங்களில் 22 -மேற்கோள்குறியிட்டு காட்டிய இறை வார்த்தைகளும் என நற்செய்தி நூல்கள் மொத்தம் 40 - இறை வசனங்களில் உயிர்த்த ஆண்டவரின் 33- மேற்கோள்குறியிட்டு காட்டிய இறை வார்த்தைகளை நமக்கு வழங்குகின்றன.

இந்த உயிர்த்த ஆண்டவரின் வார்த்தைகளை நாம் தியானிக்கும் போது, அவர் தருகின்ற ஏழு செய்திகள் நமக்கு வெளிப்படுகின்றன. திருவிவிலியம் சொல்லும் உயிர்த்த ஆண்டவரின் ஏழு செய்திகள்.

## 1. அமைதி

உயிர்த்த ஆண்டவரின் முதல் செய்தி "அமைதி". இயேசு உயிர்ப்புக்கு பிறகு தன் சீடர்களுக்கு தோன்றி சொன்ன முதல் வார்த்தை "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" (யோவான் 20: 19 &26). இயேசு ஒவ்வொரு முறையும் சீடர்களுக்கு காட்சி தந்த போது அவர்கள் குழப்பத்தில், கலக்கத்தில், துக்கத்தில் இருந்தார்கள். அவர்களுக்கு இயேசுவின் அமைதி தேவைப்பட்டது. உயிர்த்த ஆண்டவர் தரும் இந்த அமைதி இன்றும், நம் உள்ளங்களுக்கும், இல்லங்களுக்கும், வீட்டுக்கும், நாட்டுக்கும் தேவை. உயிர்த்த இயேசுவின் அமைதியில் குடிகொள்வோம். தூய பிரான்சிஸ் அசீசியார் ஜெபித்தது போல், அன்னை தெரசா ஜெபித்தது போல் "இறைவா என்னை உமது அமைதியின் கருவியாக்கும்" என உயிர்த்த ஆண்டவர் தரும் முதல் செய்தியாம் அமைதியை நம் வாழ்விலும் பெற்றுக் கொள்வோம்.




## 2. தூய ஆவி

உயிர்த்த ஆண்டவரின் இரண்டாவது செய்தி "தூய ஆவி". "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" (யோவான் 20: 25) என உயிர்த்த ஆண்டவர் இறைமகன் இயேசு கிறிஸ்து சீடர்களுக்கு காட்சி அளித்தபோது அவர்கள் மேல் ஊதி அவர் கூறிய வார்த்தைகள் இவை. தூய ஆவியின் வல்லமையால் மரியின் உதிரத்தில் உதித்து, மனுக்குல மீட்புக்காய் தன்னுயிரை ஈந்து, உயிர்த்து அதே தூய ஆவியையே நமக்கு இரண்டாம் செய்தியாக தருகிறார்.



"உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட தூய ஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா?" ( 1 கொரிந்தியர் 6: 19) எனும் பவுலடிகளாரின் இறைவார்த்தைக்கு ஏற்ப நாம் தூய ஆவி தங்கும் ஆலயமாக வாழ்வோம்.

## 3. ஆறுதல்

உயிர்த்த ஆண்டவர் தரும் மூன்றாவது செய்தி "ஆறுதல்". "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28) என்று ஆறுதல் கூறிய



இறை மைந்தன் தன்னுடைய உயிர்ப்புக்கு பிறகு மகதலா மரியாவுக்குத் காட்சி அளித்தபோது "ஏனம்மா அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?" (யோவான் 20: 15) எனவும், திபேரிய கடலருகே ஏழு சீடர்களுக்கு காட்சி அளித்தபோது "பிள்ளைகளே, மீன் ஒன்றும் கிடைக்கவில்லையா?" (யோவான் 21:5) எனவும் தன்னுடைய சீடர்களுக்கு காட்சி அளித்தபோது "நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்?" (லூக்கா 24:38) எனவும் ஆறுதல் கூறி, "ஆறுதல்" என்னும் செய்தியை நமக்கு உயிர்த்த ஆண்டவர் வழங்குவதை பார்க்கின்றோம். அவர் தரும் இந்த ஆறுதலை நம்முடைய வாழ்க்கைக்கு எடுத்துச் செல்வோம்.

## 4 .அன்பு

உயிர்த்த இயேசுவின் நான்காவது செய்தி "அன்பு". "உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும், உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து. இதுவே தலைசிறந்த முதன்மையான கட்டளை.



உன்மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்பது இதற்கு இணையான இரண்டாவது கட்டளை." (மத்தேயு 22: 37 - 39) என்று இறை அன்பையும், பிறர் அன்பையும் வெளிப்படுத்திய இறைமகன் இயேசு கிறிஸ்து உயிர்ப்புக்கு பிறகு அதே செய்தியாம் "அன்பை" தருகின்றார். இயேசு பேதுருவிடம் "யோவானின் மகன் சீமோனே நீ இவர்களை விட மிகுதியாக என்மீது அன்பு செலுத்துகிறாயா?" (யோவான் 21:15,16&17) என்று மூன்று முறை கேட்பதை நாம் பார்க்கின்றோம். இது இறை அன்பையும் "என் ஆடுகளை பேணி வளர்" (யோவான் 21: 17) என இது பிறர் அன்பையும் நமக்கு எடுத்துக் கூறுகின்றது. ஆம், இதுவே கிறிஸ்தவ வாழ்வின் இருபெரும் தூண்கள். இத்தூண்களில் நம்முடைய கிறிஸ்தவ வாழ்வை அமைப்போம்.

## 5. மனமாற்றம்




உயிர்த்த இயேசுவின் ஐந்தாவது செய்தி "மனமாற்றம்". "காலம் நிறைவேறிவிட்டது, இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது; மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்". (மாற்கு 1:15) என கூறிய இறைமகன் இயேசு, தன் உயிர்ப்புக்கு பிறகு "பாவமன்னிப்புப் பெற மனம் மாறுங்கள்" (லூக்கா 24:47) என தன்னுடைய சீடர்களிடம் கூறுவதையும், அதை பறைசாற்ற அழைப்பு விடுப்பதையும் நாம் காண்கின்றோம். இது நம் ஒவ்வொருவருக்கும் மனமாற்றத்திற்கான உயிர்த்த ஆண்டவரின் அழைப்பு.

## 6. நம்பிக்கை


உயிர்த்த இயேசுவின் ஆறாவது செய்தி "நம்பிக்கை". "நம்பிக்கை குன்றியவனே, ஏன் ஐயம் கொண்டாய்?" (மத்தேயு 14: 31) என இயேசு கடல் மீது நடக்க முயன்ற தன் சீடரான பேதுருவைப் பார்த்து கேட்டார்.

அதே இயேசு கிறிஸ்து உயிர்ப்புக்கு பிறகு தன்னுடைய சீடர்களை பார்த்து, "நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர்; அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர்; புதிய மொழிகளைப் பேசுவர்". (மாற்கு 16:17) எனவும் "ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" (யோவான் 20: 27) என தன் சீடரான தோமாவை பார்த்து கூறுகிறார். இயேசு தன்னுடைய சீடர்களை மட்டுமல்லாது நம் ஒவ்வொருவரையும் நம்பிக்கையோடு வாழ அழைப்பு தருகின்றார்.




## 7. சீடத்துவம்

உயிர்த்த இயேசுவின் ஏழாவது செய்தி "சீடத்துவம்". "என் பின்னே வாருங்கள்" (மத்தேயு 4: 19) என தன்னுடைய சீடர்களை அழைத்த இயேசு



உயிர்ப்புக்கு பிறகு "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்கு 16: 15) என தன்னுடைய சீடர்களுக்கு சீடத்துவ வாழ்க்கைக்கு அழைப்பு தருகிறார். அதே இயேசு தன்னுடைய சீடரான பேதுருவிடம் "என்னைப் பின் தொடர்" (யோவான் 21:19) என உயிர்ப்புக்கு பிறகு காட்சி அளித்தபோது கூறுகிறார். நம் ஒவ்வொருவரும் நம்முடைய திருமுழுக்கு வழியாக இந்த சீடத்துவ வாழ்க்கைக்கு அழைக்கப்படுகின்றோம். உயிர்த்த ஆண்டவரின் உன்னதமான செய்தியாம் இந்த சீடத்துவ செய்தியை ஏற்று இயேசுவின் சீடராவோம்.

"ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன". (யோவான் 6:68) என பேதுரு இயேசுவிடம் கூறியதைப்போல நிலை வாழ்வு தருகின்ற இறைவார்த்தையை நம்முடைய வாழ்வாக்குவோம். விவிலியம் எடுப்போம், இயேசுவின் வார்த்தையை தியானித்து உயிர்த்த ஆண்டவரின் செய்திகளை நம்முடைய வாழ்வாக்குவோம்.

**வீடியோவில் காண....** https://youtu.be/fqD3ooqEa1E

# திருவிவிலியம் சொல்லும் உயிர்த்த ஆண்டவரின் மூன்று அற்புதங்கள்

மனித வாழ்க்கையில் விவரிக்க முடியாத, எதிர்பார்க்காத, ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடியதும், எல்லாவற்றுக்கும் மேலாக, மனித வாழ்வில் இறைவனின் வல்ல செயல்கள் இருந்து அது அவனுக்கு விசுவாசத்தை வளர்த்தெடுத்தால் அதை அற்புதம் மற்றும் அதிசயம் என நாம் கூறலாம்.




இறைமகன் இயேசு கிறிஸ்து தன்னுடைய மூன்று ஆண்டு பணி வாழ்வில், எண்ணற்ற அற்புதங்களை செய்து இருக்கின்றார் . இறைமகன் இயேசு கிறிஸ்து தனது பணி வாழ்வில் செய்த அற்புதங்களை, அடையாளங்களை விவிலியத்தின் கண் நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம்.


1. நோயாளிகளை குணப்படுத்துதல்
2. தீய ஆவிகளை ஓட்டுதல்
3. இறந்தவர்களை உயிர்தெழச் செய்தல்
4. இயற்கைச் சார்ந்த அற்புதங்கள்



இவ்வாறாக இயேசு எண்ணற்ற அற்புதங்களை செய்து இருந்தாலும், தன்னுடைய உயிர்ப்புக்கு பிறகு, அவர் சில அற்புதங்களை செய்து இருக்கின்றார் என்பதை திருவிவிலியத்தின் அடித்தளத்தில் நாம் கூறலாம். திருவிவிலியம் சொல்லும் உயிர்த்த ஆண்டவரின் மூன்று அற்புதங்கள்.

# 1. இயேசு சாவை வெற்றி கொண்டது. (உயிர்ப்பு)

இயேசு கிறிஸ்து சாவை வெற்றி கொண்டது, அதாவது உயிர்த்தது, மிகப்பெரிய அற்புதமாக கருதப்படுகிறது. இறந்தவன் ஒவ்வொருவரும் இறந்தவனாகவே இருக்கின்றானே தவிர ஒருபோதும் உயிர்ப்பதிலை, இறந்த ஒரு மனிதர் உயிர்த்திருக்கின்றார் என்றால் அது அதிசயம்... அற்புதம்... இறைமகன் இயேசு கிறிஸ்து தன்னுடைய உயிர்ப்பின் வழியாக நம்முடைய கிறிஸ்தவ விசுவாசத்தை, அதாவது கிறிஸ்தவத்தை, உறுதிப்படுத்தியிருக்கிறார்.



கிறிஸ்தவம் வளர்ந்திருக்கின்றது, நாம் எல்லோரும் கிறிஸ்தவர்களாக இருப்பதற்குப் அடித்தளமாக இருப்பது இயேசு கிறிஸ்துவினுடைய இந்த மாபெரும் உயிர்ப்பு தான். இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்ப்பே மிகப்பெரிய அற்புதம் என்று கூறலாம். இதைத்தான் பவுல் அடிகளார் 1கொரிந்தியர் 15: 44-ல் 'மனித இயல்பு கொண்ட உடலாய் விதைக்கப்படுவது ஆவிக்குரிய உடலாய் உயிர்பெற்று எழுகிறது". ஆக மனித உடலாக புதைக்கப்பட்ட இயேசுவின் உடல் ஆவிக்குரிய உடலாக உயிர்பெற்று எழுந்தது என்பது அற்புதம்.

இயேசு கிறிஸ்துவினுடைய இந்த உயிர்ப்பில் கல்லறை திறக்கப்பட்டிருக்கிறது. (லூக்கா 24:2) இயேசு கிறிஸ்துவினுடைய இந்த உயிர்ப்பில் கல்லறை வெற்றிடமாக்கப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவினுடைய இந்த உயிர்ப்பில் கல்லறையில் சுருட்டிய துணிகள் கிடக்கின்றன. (லூக்கா 24: 12) இவை எல்லாமே மிகப்பெரிய அற்புதம் தானே.

## 2. இயேசு சீடர்களுக்கும் மற்றவர்களுக்கும் காட்சி கொடுத்தல்.

இறைமகன் இயேசு கிறிஸ்து உயிர்ப்புக்கு பிறகு தன்னுடைய சீடர்களுக்கும் இன்னும் பலருக்கும் 40 நாட்களில் காட்சி அளித்திருக்கிறார். இந்த இயேசுவினுடைய ஒவ்வொரு காட்சியுமே மாபெரும் அற்புதங்கள் என்று தான் நாம் சொல்ல முடியும். இயேசு தன்னுடைய சீடர்கள் கதவு மூடப்பட்ட அறையில் இருந்த போது, உள்ளே அவர்கள் முன் தோன்றியதும், மீண்டுமாக அவர்கள் முன் இருந்து அவர் மறைந்ததும் (யோவான் 20 :19) எம்மாவு



வழியில் சீடர்களுக்கு அப்பத்தை பிடுகின்றபொழுது அவர் மறைவதும் (லூக்கா 24: 30 & 31) என இயேசு ஒவ்வொரு முறையும் காட்சிகளில் தோன்றுவதும் மறைவதும் மிகப்பெரிய அற்புதமாக கருதப்படுகிறது.


## 3. சீடர்கள் எண்ணற்ற மீன்களை பிடிக்க செய்தல். (யோவான் 21: 1 -14)

இறைமகன் இயேசு கிறிஸ்து தன்னுடைய உயிர்ப்புக்கு பிறகு திபேரியக் கடல் அருகே தன்னுடைய சீடர்கள் 7 பேருக்கு தோன்றுகின்றார். இயேசு அவர்களிடம், "பிள்ளைகளே! மீன் ஒன்றும் கிடைக்கவில்லை?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "இல்லை" என்றார்கள். அவர் "படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள்; மீன் கிடைக்கும்" என்று அவரிடம் கூறினார்."



அவர்களும் அவ்வாறே வீசினார்கள், ஏறக்குறைய அவர்கள் 153 பெரிய மீன்களைப் பிடித்தார்கள். இத்தகைய பெரிய மீன்கள் இருந்தும் வலைகள் தெரியவில்லை. ( யோவான் 21:11)

இயேசுவினுடைய உயிர்ப்புக்கு பிறகு அவருடைய இந்த மூன்று அற்புதங்களில், முதல் இரண்டு அற்புதங்கள் இறைமகன் இயேசு கிறிஸ்து உயிர்த்தது, அவர் காட்சியளித்தது என இவை மறைமுக அற்புதங்களாகவே கருதப்படுகிறது. அவர் தன்னுடைய சீடர்கள் மிகுதியான மீன்களைப் பிடிக்க செய்ததையே நேரடி அற்புதமாக நற்செய்தி நமக்கு வெளிப்படுத்துகின்றது. யோவான் நற்செய்தி, இயல் -21, இறைவார்த்தை- 25 -ல் "இயேசு செய்தவை வேறு பலவும் உண்டு. அவற்றை ஒவ்வொன்றாக எழுதினால், எழுதப்படும் நூல்களை உலகமே கொள்ளாது என கருதுகிறேன்" என்று யோவான் நற்செய்தியாளர் குறிப்பிட்டிருக்கின்றார். இது இறைமகன் இயேசு கிறிஸ்து இன்னும் எண்ணற்ற அற்புதங்களை, அடையாளங்களை செய்திருக்கின்றார் என்று நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது. இயேசுகிறிஸ்துவினுடைய இந்த அற்புதங்கள், அடையாளங்கள் நம்முடைய விசுவாசத்தை வளர்க்கின்றது. இந்த அற்புதங்களை விவிலியம் எடுத்து வாசிப்போம். கிறிஸ்தவ விசுவாசத்தில் நாளும் வளர்ப்போம்.



**வீடியோவில் காண....** https://www.youtube.com/watch?v=MH7u5z1ktD0

# திருவிவிலியம் சொல்லும் இயேசுவின் விண்ணேற்றத்தின் ஐந்து வெளிப்பாடுகள்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

எனும் குறளின் பொருளுக்கு ஏற்ப அன்பு இல்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே உரிமை பாராட்டுவர். அன்புள்ளம் கொண்டவர் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பிறருக்கு வழங்குவர். ஆம், இறைமகன் இயேசு உலக மக்கள் மீது அன்பு மழை பொழிந்து, தன்னிடமிருந்த யாவற்றையும், தன் உயிரையும் தந்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, நாற்பதாம் நாள் விண்ணேற்றமடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார். (மாற்கு 16 :19)



இயேசுவின் பாடுகளையும், இறப்பு மற்றும் உயிர்ப்பையும் தியானிக்கும் நாம் இயேசுவின் விண்ணேற்றத்தை அதிகம் தியானிப்பதில்லை. திருவிவிலியத்தின் அடித்தளத்தில் இயேசுவின் விண்ணேற்றத்தையும், இந்த விண்ணேற்றம் எடுத்துரைக்கும் ஐந்து வெளிப்பாடுகளையும் தியானிப்போம்.

## 1. தந்தை அனுப்பிய மைந்தன் திரும்பிச் செல்லுதல்.

## (தந்தை மகன் உறவு)

## (யோவான் 16: 28 )

இறை மைந்தன் இயேசு தன் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், தான் தந்தையால் அனுப்பப்பட்டவன் என்பதை தன் சீடர்களுக்கு எடுத்துரைத்தார்.



"நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன். இப்போது உலகைவிட்டுத் தந்தையிடம் செல்கிறேன்." (யோவான் 16 :28) "இன்னும் சிறிது காலமே உங்களோடு இருப்பேன்; பின்னர் என்னை அனுப்பியவரிடம் செல்வேன்." (யோவான் 7:33) என இயேசு தன் இறப்புக்கு முன் சீடர்களிடம் கூறிய இந்த வார்த்தைகளும்,

" என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன் எனச் சொல்" (யோவான் 20: 17) என இயேசு தன் உயிர்ப்புக்கு பிறகு மகதலா மரியாவிடம் கூறிய வார்த்தைகளும், இயேசுவின் விண்ணேற்றத்தை மட்டுமல்ல, மாறாக இயேசு தந்தையிடம் இருந்து வந்திருக்கிறார். மீண்டும் தந்தையிடம் செல்கின்றார் எனும் ஆழ்ந்த உண்மையை வெளிப்படுத்துகிறது.

ஆக, இயேசுவின் விண்ணேற்றம் தந்தை மகன் உறவை வெளிப்படுத்துகிறது.

## 2. துணையாளரை அனுப்புதல்

## (திருத்தூதுபணி 2:33)

## (தூய ஆவி என்னும் வாக்குறுதி)

"கிறிஸ்துவின் உடலே தூய ஆவி, அதுவே நம் திருச்சபை" என்னும் தூய அகஸ்தினாரின் வார்த்தைக்கு ஏற்ப கிறிஸ்து இயேசு தன் உயிர்ப்புக்கு பிறகு சீடர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்று தூய ஆவி.



"அவர் கடவுளின் வலப்பக்கத்துக்கு உயர்த்தப்பட்டு வாக்களிக்கப்பட்ட தூய ஆவியைத் தம் தந்தையிடமிருந்து பெற்றுக் பொழிந்தருளினார். (திருத்தூதுபணி 2:33) எனும் பேதுருவின் வார்த்தைகள் இயேசுவின் விண்ணேற்றம் தூய ஆவியாரின் வருகையைத் உறுதி செய்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வழிவகை செய்கிறது.

## 3. இயேசுவின் இறை வல்லமை வெளிப்படுதல்

### ( 1 பேதுரு 3 :22 )



இயேசு தனது மூன்று ஆண்டு பணி வாழ்வில் எண்ணற்ற அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்து தன்னுடைய இறை வல்லமையை வெளிப்படுத்தினார். "அவர் வானதூதர்களையும், அதிகாரங்களையும், வல்லமைகளையும் தமக்குப் பணியவைத்து, விண்ணுலகம் சென்று, கடவுளின் வலப்பக்கத்தில் இருக்கிறார்." (1 பேதுரு 3 :22) எனும் இறைவார்த்தையின் அடித்தளத்தில் இயேசுவின் விண்ணேற்றம் அவரது இறை வல்லமையை நமக்கு வெளிப்படுத்துகிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

## 4. மனமாற்றமும் பாவமன்னிப்பும் அளித்தல்.

## (திருத்தூதுப் பணி 5:31)


ஒருவன் மன்னிப்பு என்று கேட்டு வரும் போதெல்லாம் மன்னித்து கொண்டே இரு என மன்னித்து வாழ அழைத்த இறைவன், தன் வாழ்வாலும், உம் பாடுகளாலும், இறப்பாலும் மற்றும் உயிர்ப்பாலும் இவ்வுலகத்திற்கு மீட்பு வழங்கிய மீட்பர் தன் விண்ணேற்றத்தாலும் மீட்பை அளிக்கிறார். "இஸ்ராயேல் மக்களுக்கு மன மாற்றத்தையும் பாவமன்னிப்பையும் அளிப்பதற்காகக் கடவுள் அவரைத் தலைவராகவும் மீட்டராகவும் தமது வலப்பக்கத்துக்கு உயர்த்தினார்." (திருத் பணி 5: 31 ) எனும் இறைவார்த்தையின் அடித்தளத்தில் இயேசுவின் மாபெரும் இந்த விண்ணேற்றம், நம் ஒவ்வொருவருக்கும் மன மாற்றத்தையும், பாவமன்னிப்பையும் வழங்குவதற்காக எனும் உண்மையை இவை வெளிப்படுத்துகிறது.



## 5. நமக்காகப் பரிந்து பேசுதல்

## (உரோமையர் 8 :34 )

"இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத்தேயு 10: 20) என வாக்குறுதியளித்த இறைமைந்தன் இயேசு நம் வாழ்வின் எல்லா நிலையிலும் நமக்காக தந்தையாம் கடவுளிடம் பரிந்து பேசுகிறார். "இறந்து, ஏன் உயிருடன் எழுப்பப்பட்டுக் கடவுளின் வலப்பக்கத்தில் இருக்கும் இயேசு நமக்காக பரிந்து பேசுகிறார் அன்றோ!" (உரோமையர் 8: 34) எனும் பவுல் அடிகளாரின் வார்த்தைகள் இயேசுவின் விண்ணேற்றம் அவர் நமக்காக என்றும் தந்தையிடம் பரிந்து பேசுகிறார் என்பதை எடுத்துரைக்கிறது.





விண்ணேற்பு வாழ்வு என்பது விண்ணுக்குச் சென்று மறைந்த வாழ்வு பெறுவது என்பதல்ல; மாறாக வாழ்வின் உயர்வை அடைந்து இன்றும் என்றும் அழியாமல் வாழ்ந்து கொண்டிருப்பது.

பிறரை வாழ வைப்பது நம்மை வாழ வைக்கும் இறைமைந்தன் இயேசுவின் விண்ணேற்றத்தை விவிலியத்தின் கண் கொண்டு தியானிப்போம். விண்ணேற்றம் வெளிப்படுத்தும் உண்மைகளை வாழ்வாக்குவோம்.

**வீடியோவில் காண....** https://www.youtube.com/watch?v=-hbRo1zup34

# திருவிவிலியம் சொல்லும்

# தூய ஆவியின்

# ஒன்பது உருவகங்கள்

"தூய ஆவியின்றி நாம் காற்றில்லாமல் தவித்து நிற்கும் கப்பலாவோம்" எனும் சி. எச் ஸ்பர்ஜனின் வார்த்தைக்கு ஏற்ப கிறிஸ்தவ வாழ்வின் தொடக்கமும் அடிப்படையாக இருப்பது தூய ஆவி. அதனால்தான் அப்போஸ்தலர்கள் தூய ஆவியைப் பெற்ற பெந்தகோஸ்து நாளை திருச்சபையின் பிறப்பு நாளாகவும், திருமுழுக்கின் வழியாய் நாம் தூய ஆவியைப் பெற்ற நாளை கிறிஸ்தவத்தில் நமது பிறப்பு நாளாகக் கொண்டாடுகின்றோம். தூய ஆவியின் செயல்பாடுகளை, ஆற்றல்களை, கொடைகளை மற்றும் கனிகளை திருவிவிலியத்தில் எண்ணற்ற பகுதிகளில் நாம் கண்டுணர்ந்தாலும், இந்தத் தூய ஆவியின் உருவகங்களை ஒன்பதாக வகைப்படுத்தி தியானிப்போம். திருவிவிலியம் சொல்லும் தூய ஆவியின் ஒன்பது உருவகங்களும், மனித வாழ்வின் அதன் வெளிப்பாடுகளும்...



## 1. காற்று (திப 2:2)

### (உயிரின் அடையாளம்)

பெந்தகோஸ்து நாளில் அப்போஸ்தலர்கள் ஒன்று கூடி இருந்த போது, தூய ஆவியின் வருகையின் போது, திடீரென்று கொடும் காற்று வீசியது (திப 2:2) என்பதும், படைப்பின் தொடக்கத்தில் மண்ணுலகு வெறுமையாக இருந்தபோது ஆவியானவர் அசைந்தாடிக் கொண்டிருந்தார் (தொநூ 1:2) என்பதும்,





ஆவியானவர் காற்றாக திருவிவிலியத்தில் உருவகம் படுத்தபடுகிறார் என்பதை புரிந்து கொள்ள செய்கிறது. காற்று தான் மனித வாழ்வின் உயிராக இருக்கிறது. தூய ஆவியானவரும் நம் கிறிஸ்தவ வாழ்வின் உயிர் மூச்சாக இருக்கிறார், நாம் வாழ்வாக இருக்கிறார்.

## 2. நெருப்பு (மத் 3:1 )

## (ஒளியின் அடையாளம்)



திருமுழுக்கு யோவான் யூதேயாவின் பாலைநிலத்தில் "அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார்" (மத் 3:1) என இறைமகன் இயேசுவைப் பற்றி மட்டுமல்லாது தூய ஆவி என்னும் நெருப்பால் என ஆவியானவரை உருவகப்படுத்துகிறார். இதே நாளில் நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் அப்போஸ்தலர்கள் மீது இறங்கி வந்தார் (திப 2:3). அச்சத்தால், கலகத்தால் இருளடைந்த சீடர்களின் வாழ்வை ஒளிகொண்டு ஏற்றியது தூய ஆவி. இருள் மறைய வேண்டும் என்றால் ஒளி ஏற்றப்படவேண்டும். இருளான நமது வாழ்வு மறைய பாவம் வாழ்வு மறைய ஒளியாம் தூய ஆவியானவர் நம்மில் வாழச் செய்வோம்.

## 3. நாவு (திபா 2:3)

## (நற்செய்தி அறிவிப்பின் அடையாளம்)

பெந்தகோஸ்து நாளில் பிளவுற்ற நாவுகள் இறங்கியதும் அவர்கள் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டது (திபா 2:3) தூய ஆவியின் உருவகம் என்பதை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற துணையாளர் வருவார்.

அவரே "தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்" (யோவா 15:26) உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் என இயேசு கூறுவதும் தூய ஆவி நாவு என்னும் உருவத்தால் உருவகப்படுத்துகிறார் என்பதை காட்டுகிறது. சீடர்கள் தூய ஆவியைப் பெற்ற பிறகு உலகெங்கும் சென்று நற்செய்தியை பறைசாற்றினார்கள். கிறிஸ்தவர்களாகிய நாமும் நம் வாழ்வின் வழியாக நற்செய்தியைப் பறைசாற்ற தூய ஆவி நம் வாழ்வாக வேண்டும்.



## 4. தண்ணீர் (தொநூ 1:2)

## (தூய்மையின் அடையாளம்)

படைப்பின் தொடக்கத்தில் நீர் திரளின் மீது கடவுளின் ஆவியானவர் அசைந்தாடிக் கொண்டிருந்தது (தொநூ 1:2) எனும் இறை வார்த்தை தண்ணீராக தூய ஆவி உருவகப்படுத்தப்படுகிறது என்பதை காட்டுகிறது. "யாரேனும் தாகமாய் இருந்தால் என்னிடம் வரட்டும்" (யோவா 7:37) "அவருடைய உள்ளத்தில் இருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து ஓடும்" (யோவா 7: 38) தம்மிடம் நம்பிக்கை கொண்டிருப்போர் பெறப்போகும் தூய ஆவியாய் குறித்து அவர் இவ்வாறு சொன்னார்" யோவா 7:39) எனும் வார்த்தைகளும் தூய ஆவி தண்ணீராக உருவகப்படுத்துவதை சுட்டிக்காட்டுகிறது. பொதுவாக தண்ணீரை சுத்தம் செய்ய பயன்படுகிறது. நம் வாழ்வில் உடலுக்கு மட்டுமல்ல உள்ளம் தூய்மை பெறவும் தூய ஆவி நமக்குத் தேவைப்படுகிறார்.



# 5. புறா (லூக்கா 3 :22)

## (அமைதியின் அடையாளம்)



இயேசு திருமுழுக்குப் பெற்றபோது தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர் மீது இறங்கியது. (லூக்கா 3 :22) எனும் வார்த்தைகள் ஆவியானவர் புறாவாக உருவகப் படுத்தப்படுகிறார் அமைதியின் சின்னமாக கருதப்படுகிறது நோவா 40 நாள் வெள்ளப்பெருக்கு பிறகு காகத்துக்கு பின் புறாவை அனுப்புவதில் பார்க்கின்றோம். (தொநூ 8:6-11) நம் வாழ்வு அமைதி பெற தூய ஆவியை ஏற்றுக் கொள்வோம்.

# 6. எண்ணெய் ( 1 சாமுவேல் 16 :13 )

## (அருட்பொழிவின் அடையாளம்)

"சாமுவேல் எண்ணெய் நிறைந்த கொம்பை எடுத்து அவன் சகோதரர் முன்னிலையில் அவனைத் திருப்பொழிவு செய்தார் அன்று முதல் ஆண்டவரின் ஆவி தாவீதின் மேல் நிறைவாக இருந்தது" (1 சாமுவேல் 16 :13 ) எனும் இறைவார்த்தையின் அடித்தளத்தில் எண்ணெய் கொண்டு அருடபொழிவு செய்யப்படுவது தூய ஆவியைப் பெற்றுக்கொள்ள என்பது எண்ணெய் ஆவியானவருக்கு உருவகப்படுத்தப்படுகிறது என்பதை காட்டுகிறது. அதனால்தான் நோயுற்ற போதும் திருச்சபையின் மூப்பர்களால் எண்ணெய்ப் பூசி இறைவனிடம் வேண்டுகின்றனர். (யாக்கோபு 5 :14- 15)



நாமும் திருமுழுக்கு, உறுதிபூசுதல் மற்றும் குருத்துவம் எனும் திருவருட் சாதனங்கள் பெறும்போது எண்ணெய் பூசி தூய ஆவியாரால் அருட்பொழிவு செய்யப்படுகிறோம்.

## 6. வல்லமை ( லூக்கா 24 :49 )


### (ஆற்றலின் அடையாளம்)



"இதோ என் தந்தை வாக்களித்த வல்லமையை நான் உங்களுக்கு அனுப்புகிறேன்" ( லூக்கா 24 :49 ) என இயேசு சீடர்களிடம் ஆவியானவரை வல்லமை என உருவகப்படுத்துகிறார். அன்னை மரியா மீதும் தூய ஆவி என்னும் வல்லமை நிழலிட்டு இயேசு மண்ணுலகில் மனிதரானார். (லூக்கா 1:35) நாம் நமது கிறிஸ்தவ வாழ்வில் ஆற்றலோடு வாழ தூய ஆவியின் வல்லமை நம்மீது நிழலிட வேண்டும்.

## 7. கரங்கள் (திப 8: 17- 19)


### (ஆசீர்வாதத்தின் அடையாளம்)



"பேதுருவும் யோவானும் தங்கள் கைகளை அவர்கள்மீது வைக்கவே அவர்கள் தூய ஆவியைப் பெற்றார்கள்" (திப 8: 17- 19) எனும் வார்த்தைகள் கரங்களின் வழியாய் பலரும் தூய ஆவியை பெற்றுக் கொண்டதை நமக்கு சுட்டிக் காட்டுகிறது. அதனால் தான் குருத்துவம் மற்றும் நோயில் பூசுதலில் தலைமீது கரங்கள் வைக்கப்படுகிறது. குருக்களின் கரங்களும் அர்ச்சிக்கப்படுகிறது. இந்த தூய ஆவியார் நம் வாழ்விற்கு ஆசீர்வாதத்தை அருள்வார்.

## 9 . துணையாளர் (யோவான் 14: 26 )

## (வாழ்வின் அடையாளம்)



"என் பெயரால் தந்தை அனுப்பப் போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார்" (யோவான் 14: 26) என இயேசு தூய ஆவியாரை துணையாளராக உருவகப்படுத்துகிறார். வாழ்விற்கு வாழ்க்கை துணை நிச்சயம் தேவை என்பதை போல, நம் கிறிஸ்தவ வாழ்விற்கும் தூய ஆவியானவரின் துணை ஆணி வேராகும்.

தூய ஆவியாரின் ஒவ்வொரு உருவகங்களும், நம் வாழ்வில் ஒவ்வொரு வெளிப்பாடாக அமைகிறது. அதுவே நம் வாழ்வாகவும் அமைகிறது. "தூய ஆவியார் நம்மை உரு மாற்றி புதுப்பிக்கிறார், அவரே நம் வாழ்விற்கு



தைரியத்தையும் மகிழ்ச்சியும் தருகிறார்". எனும் திருத்தந்தை பிரான்சிசின் வார்த்தைக்கு ஏற்ப தூய ஆவியின் கொடைகளையும் கனிகளையும் நம் வாழ்வில் பெற, திருவிவிலியம் எடுத்து ஆவியானவரின் உருவகங்களை வாசிப்போம். அதன் வெளிப்பாடுகளை வாழ்வோம்.

**வீடியோவில் காண....** https://www.youtube.com/watch?v=9wvEX1pzIGQ